www.tamilarangam.net

TELO NEWS

LONDON

DECEMBER 1986

தினகரன்

2-12-1986

முல்லைத்தீவில்

# “டெலோ” வீரர்கள் கடும் போர்!

## 8 ராணுவத்தினர் சாவு!!

யாழ்ப்பாணம், டிச. 2—
டெலோ வீரர்கள் தாக்குதலில் 8 ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

**சபாரத்தினம்**

இலங்கையில் தமிழர்கள் தனிநாடு கேட்டு போராடி வருகிறார்கள் அல்லவா? இதில் ''டெலோ'' இயக்கம் குறிப்பிடத்தக்கது. இந்த இயக்க தலைவர் சிறீ.சபாரத்தினம் களத்தில் இருந்த போது சுட்டுகொல்லப்பட்டார்.

**செல்வம்**

அதன் பிறகு புதிய தலைவர் செல்வம், தங்கதுரை, குட்டிமணி, ஜெகன், சபாரத்தினம், வழியில் இயக்கத்தை கட்டிக்காத்து மீண்டும் சிங்கள ராணுவத்தை விரட்டி அடிக்கும் திட்டத்தில் தீவிரமாக செயல்பட்டார்.

**8 ராணுவம் சாவு**

நேற்று முல்லைத் தீவு பகுதியில் சிங்கள ராணுவத்தை மட்க்கி டெலோ வீரர்கள் சரமாரியாக சுட்டனர். இதனால் இரண்டு தரப்பினருக்கும் இடையே கடும் போர் நடந்தது. பயங்கர வெடிகுண்டுகளும் பயன்படுத்தப்பட்டன.

இதில் 8 ராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 4 பேர் காயம் அடைந்தனர்.

**வரவேற்பு**

''டெலோ'' இயக்கம் மீண்டும் களத்தில் இறங்கிய செய்தி இலங்கை முழுவதும் பரவியது. குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்று உள்ளது. டெலோ வீரர்களுக்கு ஈழதமிழர்கள் அனைத்து உதவிகளையும் செய்து, வாழ்த்தினர். யாழ்ப்பாணத்தில் ''டெலோ'' வீரர்களை வாழ்த்தி நகர் முழுவதும் மக்கள் சுவரொட்டிகளை ஒட்டி உள்ளனர்.



'டெலோ' தலைவர் செல்வம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "We Will Never Turn Our Weapons Against Our People" —Selvam

Mr. Selvam, Secretary - General of the Tamil Eelam Liberation Organisation (TELO) seems hardly a militant.

He listens darefully, speaks softly but less.

He has been elected as the Secretary-General after the assassination of Mr. Sri Sabaratnam, the then leader of the TELO in May this year.

Mr. Selvam prefers a compromising attitude towards the Liberation Tigers of Tamil Eelam (LTTE) even after the clashes in which 127 TELO members were killed. But he, however, has to face extremist forces within his organisation.

Below are excerpts from his talk:

"In our land, now, there are five major groups fighting for liberation. In the beginning, everybody knows that there was the 'Tamil Eelam Liberation Organisation TELO and TELO alone.

"In 1969, Mr. Thangathurai— the father of our Nation — introduced the concept of an armed struggle while denouncing the then prevailed concepts of Satyagraha and Ahimsa. Those days were very hard for an armed revolutionary, since the people did not believe in an armed struggle or arms.

"The crucial and the vital- importance of Thangathurai, his ideology and praxis lies in the correct idenification of the changing phase of the Tamil struggle.

"The Sri Lanka army is our enemy, not others. We will never turn our weapons against our people. The other groups are also our Comrades and fighting for Tamil Eelam. If we want to ensure our victory we must unite and must continue our armed struggle in one way. I kindly request all other groups to co-operate, unite and fight.

"The ENLF was formed in 1984. The E P R L F and EROS, the TELO came under one banner. In 1985 -the LTTE joined the ENLF. Circumstances made the ENLF to backtrack with these groups in 1986. We are ready for unity in the name of the struggle.

We are not against peace makers. Indian Government is trying to bring a political solution through negotiations. Sri Lanka is trying to anihilate us. Let the Indian Government try. We will co-operate.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
TELO

# இனி ஒரு விதி செய்வோம்.

மீண்டும் ஒரு முறை ஈழத்தின் தெருக்களிலே போராளிகளின் குருதி விடுதலையின் பேரால் இயங்கும் அராஜகவாதிகளின் மனிதவேட்டையால் சிந்தப்பட்டிருக்கிறது. மக்கள் துப்பாக்கிமுனையில் பார்வையாளர்களாக நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுப்போடப்பட்டிருக்கிறது. பொதுவில், தமிழர் தாயகம் அடக்குமுறை என்னும் இருளினால் மூடப்பட்டுள்ளது.

இக்கொடிய நிலைமைக்கு யார் காரணம்? சிங்கள பேரினவாத ஒடுக்குமுறையாளர்கள்தான், என்றால் விளங்கிக் கொள்ளலாம். விடுதலைப்போராளிகள் என்ற போர்வையில் இயங்கும் எதிர்ப்புரட்சியாளர்கள் என்றால் எவ்வாறு விளங்கிக்கொள்ளமுடியும்?

சிங்கள பேரினவாத ஒடுக்குமுறையாளர்களிடமிருந்து தமிழ் பேசும் மக்களைவிடுவித்து, பூரண ஜனநாயக உரிமையை அனுபவிக்கச்செய்வோம் எனக்கூறியவாறே, அனுபவித்த ஒரு சில உரிமைகளையும் பறித்து, அம்மக்களின் உயிருக்கு உத்தரவாதமுமில்லாமல் செய்து, விடுதலை இயக்கமென உரத்தக்கோஷமிடுவோரின் உள்நோக்கத்தினை மக்களால் புரியமுடியவில்லை.

தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்ட வரலாற்றில், பிரிக்கமுடியாத பகுதியாகிவிட்ட நாம் இக்கோரநடவடிக்கைகள் குறித்து மௌனமாக இருக்க முடியாது. இக்கொடிய செயல்கள் எல்லைமீறிவிட்டன. அடுக்கடுக்காக எமது தலைவர்களையும், போராளிகளையும் இத்தகைய கொடிய அரக்கர்களின் கொடுமைகளுக்கு இரையாக்கியுள்ளோம். இவ் அரக்கத்தனம் இனியும்தொடர அனுமதிக்க முடியாது. சமாதானம், பேச்சுவார்த்தை, ஒற்றுமை என்ற பேச்செல்லாம் செல்லாக்காசாகி, பிரச்சனைகள் யாவற்றிற்குமே துப்பாக்கிமூலம் பதில் சொல்லும் மனநோய் இன்று விடுதலைப் போராட்டத்தின் கூறுகிவிட்டது. நாம் கடந்த ஒருவருட காலமாக எடுத்த முயற்சிகள் யாவும் துப்பாக்கி மனநோயாளர்களுக்குப் புரியாத பாஷையாகி விட்டது. எனவே இனிமேல் மக்களோடு பேசுவதைத்தவிர வேறு வழியில்லை.

தமிழ் பேசும் பெருமக்களே!

எமது ஜனநாயக உரிமையை வென்றெடுக்கும் போராட்டம் தற்போது புதிய திருப்புமுனையில் நிற்பதாக நாம் உணர்கிறோம். தமிழ் பேசும் மக்களின் விடுதலையைப்பெற்றெடுக்க நடைபெறும் இப்போராட்டம் தீர்க்கமான ஒரு கட்டத்திற்கு மாறிச்செல்வதற்கான சூழ்நிலையை அடைந்துள்ளதாகக் கருதுகிறோம்.

இப்போராட்ட நிலைமையும், அதைத்தொடர்ந்து ஏற்பட்டுள்ள பொருளாதார, அரசியல், சமூக நிலைமைகளும், தென்னிலங்கை அரசியல் சக்திகளிடையே இருபெரும் பிளவை ஏற்படுத்தி வருகிறது. ஒடுக்குமுறை, சுரண்டல், இனவெறி மற்றும் ஏகாதிபத்திய, முதலாளித்துவ போக்குக்களுக்கு எதிரான முற்போக்கு சக்திகள் ஒருபுறமும், பேரினவாத, மதவெறி, மற்றும் பிற்போக்கு ஏகாதிபத்திய, முதலாளித்துவ சக்திகள் மறு புறத்திலுமாக அணிதிரண்டு வருகின்றன. இவ்வாறான நிலைமைகள், சர்வதேச ஏகாதிபத்திய முதலாளித்துவ நலன்களுக்கு எதிராக இருந்துவருவதால், குறிப்பாக இந்நிலைமைகளுக்குத் தமிழ் பேசும் மக்களின் போராட்டம் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதால் இப்போராட்டத்தினை நசுக்குவது சர்வதேச பிற்போக்கு சக்திகளின் அவசிய தேவையாகியுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப் பின்னணியில்தான் E.P.R.L.F மீதான புலிகள் இயக்கத்தினரின் அராஜக நடவடிக்கைகளின் பெறுபேறுகளைப் பார்க்கின்றோம்.

ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தின் கூறுகளைச் சரீர ரீதியாகவும், ஸ்தாபன ரீதியாகவும் ஒழிக்கநினைக்கும் போக்கு, எதிரிக்கு மட்டுமே இருக்க முடியும். இவை சகோதர இயக்கங்கள் மத்தியிலே நிலவுமாயின் போராட்டத்தினைச் சீர்குலைத்து, எதிரியிடம் சரணாகதி அடையும் நிலைமைக்கே தள்ளிவிடும். இப்போக்கு ஆபத்தானது. களையப்படவேண்டியது. இவ்வாறான போக்கு விடுதலைப்புலிகள் இயக்கத்தலைமையிடம் நிறையக்காணப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், பல விநோதமான, ஆனால் சர்வதேச விடுதலைப்போராட்ட வரலாறுகளில் காணப்பட்டுள்ள பல தோற்றப்பாடுகளையும் காண்கிறோம். அதாவது பொருத்தமில்லாத தருணங்களில் இந்திய எதிர்ப்புப் பிரச்சாரங்களை முடுக்கி விடுவது, ஆயிரமாயிரம் மாணவர்கள், யுவதிகள், தொழிலாளர்கள், விவசாயிகள், மற்றும் இன்னோரன்ன பலர் சிந்திய இரத்தத்தினைத் தமது இயக்கச் சொத்தாக்கி, தனிக்கட்சி ஆட்சியென நடைமுறைக்கொவ்வாத வகையில் ஒருதலைப்பட்சமாக அறிவித்தல். குற்றச்சாட்டுகளைச் சுமத்திப் படுகொலைகளை மேற்கொள்வது, திடீரென பேச்சுவார்த்தைக்குத் தனியாகச்செல்லச் சம்மதிப்பது, அதே வேளை ஜனவரியில் சுதந்திரத் தமிழீழம் எனப்பிரகடனப்படுத்துவது, இந்திய அதிகாரிகள் சிறீ லங்காவில் நிற்கும் வேளையில் இயக்க ஒழிப்பு முயற்சியை மேற்கொள்வது, அமெரிக்க, இஸ்ரேலிய ஆயுதங்களைப்பாவிப்பதுடன் அமெரிக்க செனட்டர்களை இரகசியமாகச் சந்திப்பது, இவை அனைத்தும் விடுதலைப் புலிகளால் கடந்த சில காலங்களாக மேற்கொள்ளப்பட்டு வருபவையாகும்.

இவைகளே விடுதலைப்போராட்டத்தினை முற்றாக அழிக்கும் போக்குகளாகும். இத்தகைய காரணங்களினால் தமிழ்பேசும் மக்களின் விடுதலைப்போராட்டத்தினை எடுத்துச்செல்லும் அடிப்படைச்சக்தியை விடுதலைப் புலிகள் இயக்கம் இழந்துவிட்டதென ஆணித்தரமாக நம்புகிறோம். பார்வைக்கு விடுதலைப்போராட்ட சக்தியாகக் காணப்படினும் அடிப்படையில் தனது விடுதலைப்போராட்ட உந்து சக்தியை இழந்து, வெகுதூரம் விலகிச்சென்று, எதிரிகளுடன் கைகோர்த்து நிற்பதாகக் கருதுகிறோம்.

விடுதலைப்புலிகள்இயக்கத் தலைமைக்குள் சர்வதேச பிற்போக்குசக்திகள் ஊடுருவி விட்டதாகக் குற்றம்சாட்டுகிறோம். விடுதலைப்புலிகளால் இனிமேல் தமது பாதையைச் சரிசெய்யமுடியாத அளவுக்கு நிலைமைகள் வளர்ந்துவிட்டன. சிங்கள, பேரினவாத பிற்போக்கு சக்திகளினதும், சர்வதேச இஸ்ரேலிய மொசாட், மற்றும் சர்வதேச பிற்போக்கு ஏஜென்ட் களினதும் கைப்பொம்மையாக விடுதலைப்புலிகளின் தலைமை மாறியுள்ளது.

எனவே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் மீது, விடுதலைப்புலிகளால் ஏவிவிடப்பட்டுள்ள அராஜகத்தினைப் பயங்கரவாதம் என வர்ணிக்கிறோம். சிங்கள பேரினவாத, தரகு முதலாளித்துவ ஆட்சியாளரால் மேற்கொள்ளப்படும் பயங்கரவாதமும், விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்படும் பயங்கரவாதமும் ஒன்றே. எனவே, இது கண்டிக்கப்படுவதோடு, களையப்படவேண்டியதுமாகும்.

<u>தமிழ் பேசும் மக்களே!</u>.... <u>இனியொரு விதி செய்வோம்.</u>

விடுதலையின் பேரால் நடைபெறும் இம்மனித வேட்டையைத் தடுத்து நிறுத்துங்கள்.

இவ் அராஜக, எதேச்சாதிகார, பிற்போக்குச் சக்திகளை நிராகரியுங்கள்.

பிற்போக்குச் சக்திகளின் கூடாரமாக மாறிவிட்ட விடுதலைப்புலிகளின் தலைமையை, தேசபக்திமிக்க போராளிகளே நிராகரியுங்கள்

பலமான, தேசபக்திமிக்க, ஜனநாயக முன்னணியொன்றினை உருவாக்க ஒத்துழைப்பினை நல்குங்கள்.

இவ்வடிப்படையில் இவ்வராஜகத்திற்கு எதிராக இறுதிவரை போராடத்துணிந்துள்ள ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும், அதன் மக்கள் விடுதலைப்படைக்கும் அனைத்து ஜனநாயக சக்திகளுக்கும், எமது ஆதரவைத்தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்பாவி தமிழர்களை கொன்றால்

# ராணுவத்தினர் மீது பலமுனை தாக்குதல்!

# ‘டெலோ’ எச்சரிக்கை!!

சென்னை, செப், 24– இலங்கையில் அப்பாவி தமிழர்களை தொடர்ந்து படுகொலை செய்து வந்தால் ராணுவத்தினர்மீது பலமுனை தாக்குதல் நடத்துவோம் என்று ‘டெலோ’ எச்சரித்து உள்ளது.

இதுபற்றி சென்னையில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறிஇருப்பதாவது:–

### மோதலில் 4 பேர் சாவு

கடந்த 18–ந் தேதி இலங்கையில் கிளிநொச்சி பரந்தன் என்ற இடத்தில் ரோந்து வந்த சிங்கள ராணுவத்தினர்மீது டெலோ வீரர்கள் தாக்குதல் நடத்தினார்கள்,

இந்த மோதலில் 4 சிங்கள சிப்பாய்கள் செத்தனர். ‘டெலோ’ தரப்பில் உயிர் சேதம் எதுவும் இல்லை,

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

### கடும் தாக்குதல்

ஜெயவர்த்தன அரசுக்கு எச்சரிக்கை விடுத்து டெலோ விடுத்துள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அரசியல் தீர்வு காணஇந்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு பாதகமான எந்த ஒரு செயலையும் செய்ய வேண்டாம் என தமிழ் ஈழ விடுதலை அமைப்புகள் கேட்கப்பட்டிருக்கும் நேரத்தில் இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களை பெரிய அளவில் கொன்றொழித்து மற்றவர்களை விரட்டியடிக்க இலங்கை அரசு திட்டமிட்டு கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக கடும் தாக்குதலை தொடுத்து உள்ளது.

### 20 ஆயிரம் பேர் வெளியேற்றம்

கிழக்கு மாகாணத்தை முழுவதுமாக சுபளீகரம் செய்யும் இத்திட்டத்தில் குழந்தைகள் ‘முதியோர்கள்’ பெண்கள் உள்பட பலர் கொல்லப்பட்டு உள்ளனர்.

100–க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு உள்ளனர். 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அகதிகளாக கிராமங்களை விட்டு வெளியேறி இருக்கிறார்கள். பள்ளிக்கூடங்கள், மருத்துவ நிலையங்கள், வியாபார நிறுவனங்கள் மூடப்பட்டு விட்டன.

### எச்சரிக்கை

அப்பாவி தமிழ் மக்கள் மீதான இந்த தாக்குதலை இலங்கை அரசு உடனடியாக நிறுத்தாவிட்டால் பல்வேறு முனைகளில் இலங்கை அரசை நாங்கள் சந்திக்க வேண்டியது வரும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# our view

இனி விடிவுதான். நாம் ஒன்று சேர்ந்துவிட்டோம். மூவராயிருந்தோம். இப்போது நால்வராகிவிட்டோம். ஓர் ரத்த நட்சத்திரம் வெகு அண்மையில் தோன்றியதுபோல் ஒரு தோற்றம். வாயால் பிதற்றுவதில் பிரயோசனம் இல்லை. செயலால் காட்டுவோம். 'குருசேத்திரத்தில்' ஒன்றுபட்டு எமது வீரப்பிரதாபங்களை வெளிப்படுத்துவோம். பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றுபடுவோம்!' இவை எல்லாம் வாயால் படிக்கப்பட்ட திருவாசகங்கள். 'தோலுக்குள்' இருப்பதை மக்களுக்குக் காட்டாமல் இருக்குமட்டும் 'பசு'வாகவே இருந்திடலாம். உண்மைச் 'சொரூபம்' தெரியவந்தால் 'பாவம் மக்கள்' என்றிட வேண்டியதே! 'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்'. இப்போது பழமொழிகள் புதுப்பிக்கப்படுகின்றன. 'விருந்த நண்பன்' எழும்புவதற்கிடையில் எப்படியாவது, எவ்வித 'ஆயுதங்களையாவது' பாவித்து, அடித்து மண்ணில் புதைத்துவிட நினைப்பது 'பசு'வையும் 'தோலை'யுமே நினைக்கத்தோன்றுகின்றது. ஒவ்வொருவருக்கும் இடையில் 'உள்ளுக்குள்' பல பிரச்சினைகள் இருக்கலாம். இதைத்தீர்க்க வேண்டியவர்கள் சம்பந்தப்பட்டவர்களே. 'மற்றவர்கள்' அல்ல. 'மற்றவர்கள்' தமக்கிடையில் ஏற்பட்ட 'பிரச்சினைகளை' எப்படித் தீர்த்தார்கள், என்பதை நாம் அறிவோம். எமது பிரச்சினைகளைத் 'தூக்கி நிறுத்தி' 'மற்றவர்கள்' அபிப்பிராயம் சொல்ல நினைப்பது, தமக்கிடையில் இருக்கும் பிரச்சினைகளை மறைப்பதற்காகவே. 'நடந்த சம்பவத்தை' ஆராய்ந்து பார்க்கவேண்டியவர்கள் மக்களே அன்றி மற்றவர்கள் அல்ல! 'புத்திசாலித்தனமாக' நடக்கிறோம், என்று நினைத்து, வார்த்தைகளாலும், துண்டுப்பிரசுரங்களாலும் சேர்ந்திருந்தே எதிர்ப்பிரச்சாரம் செய்து அராஜகத்துக்குத் துணைபோகின்ற 'பசு'த்தோல் போர்த்த 'ஜீவனை'யே நினைக்கவேண்டியுள்ளது.

29-09-86- தினமணி.

## பிரபாகரன் கருத்து பற்றி கலக்கம்

சுதந்திர தனி ஈழத்தில் ஒரே கட்சி ஆட்சிதான் இருக்கும் என்று விடுதலைப் புலிகள் இயக்க (எல்டிடிஇ) தலைவர் பிரபாகரன் அண்மையில் வெளியிட்ட கருத்து, பொது மக்களை மட்டுமல்லாமல் போராளிக் குழுக்களையும் கலக்கமடையச் செய்துள்ளது. "ஒரு போல்பாட் (கம்போடியாவில் நரவேட்டை நடத்திய சர்வாதிகாரி) ஆட்சியைப் பிடிப்பதை எவரும் விரும்பவில்லை" என்று அந்த வட்டாரங்கள் கூறின.

கடந்த ஏப்ரல் மாதம் விடுதலைப் புலிகள் தாக்குதலையடுத்து யாழ்ப்பாணத்தில் செயலிழந்துபோன தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ) மீண்டும் செயல்வேகம் பெற முயன்று வருகிறது.

## மறைத்து வைத்துள்ள ஆயுதங்கள்

பல இடங்களில் அது ஆயுதங்களை மறைத்து வைத்துள்ளது. அதை மீட்க 15 பேர் அனுப்பப்பட்டுள்ளனர்.

அவை எங்கு குவித்து வைக்கப்பட்டுள்ளன என்பது கட்சியின் முக்கிய தலைவர்களுக்கே தெரியும். அவற்றைக் கைப்பற்ற எல்டிடிஇ உள்பட இதர கோஷ்டிகள் மேற்கொண்ட முயற்சி வெற்றிபெறவில்லை என்று அவை தெரிவித்தன.

சிறீ சபாரத்தினம் உள்பட 'டெலோ' இயக்கத்தினர் பலர் கொல்லப்பட்டதனால் தமிழ் நாட்டில் ஏற்பட்ட கடும் எதிர்ப்பையடுத்து 'டெலோ' அணியினரை எல்டிடிஇ இப்போது தாக்குவதில்லை. அவர்களும் சற்று பதுங்கியே நடமாடுகிறார்கள் என்றும் அவை கூறின.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைப்புலி

# பிரபாகரனுக்கு எதிராக போராளிகள் கூட்டணி!

## "பிளாட்" இயக்கம் அறிக்கை!!

தினகரன் 12/12

தினகரன்-12.12.86

சென்னை, டிச. 12— விடுதலைப்புலி பிரபாகரனுக்கு எதிராக ஈழ போராளிகள் ஒன்று திரள வேண்டும் என்று தமிழ் ஈழ மக்கள் விடுதலை இயக்கம் (பிளாட்) வேண்டுகோள் விடுத்து உள்ளது.

'தமிழ் ஈழ மக்கள் விடுதலை இயக்கம் (பிளாட்) அரசியல் செயலாளர் வாசுதேவா வெளியிட்ட அறிக்கையில் கூறி இருப்பதாவது:—

### பாசிச வெறி

விடுதலை புலிகள் 'பாசிச' வெறி கொள்கை ஈழ விடுதலை போராட்டத்தை கேலிக்கூத்தாகி விட்டது. எனவே விடுதலை போரை மீண்டும் தீவிரமாக நடத்த மற்ற போராளிகள் இயக்கம் ஒன்று திரள வேண்டும்.

ஈழ தமிழர்களை விடுதலை புலிகளிடம் இருந்து பாதுகாக்க போராளிகள் இணைந்து செயல்படவேண்டும்.

### ஜெயவர்த்தனாவிடம் தஞ்சம்

விடுதலைப்புலிகள் ஈழத் தமிழர்களை மனம் தளர செய்து விடுவார்கள். ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் தஞ்சம் அடைய செய்வார்கள்.

அதிகாரத்துக்காகவும், புகழுக்காகவும் விடுதலைபுலி பிரபாகரனும் அவரது இயக்கத்தினரும் தமிழர்களை காட்டி கொடுக்கிறார்கள்.

### மாணவர் மீது தாக்கு

கடந்த மாதம் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர் விஜயதரனை விடுதலை புலிகள் கடத்தி சென்றனர். அதை கண்டித்து ஆர்ப்பாட்டம்செய்த மாணவர்கள் மீது விடுதலை புலிகள்தாக்குதல்நடத்தினர்

இவ்வாறு அறிக்கையில் கூறி உள்ளனர்.

### மோதும் அபாயம்

இதற்கிடையில் யாழ்ப்பாணத்தில் போராளிகளுக்கும், விடுதலை புலிகளுக்கும் மோதல் நடக்கும் அபாயம் உள்ளதாக யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த தகவல் கூறுகிறது.

---

29-09-86. தினமணி.

### ஈரோஸ்-எல்டிடிஇ நெருக்கம்

தற்போது இலங்கைப் படைகளுக்கு எதிரான பல தாக்குதல்கள், கொழும்பில் நடந்த வெடி குண்டு சம்பவங்களுக்குப் பின் சக்திவாய்ந்த இயக்கமாக உருப்பெற்றுள்ள ஈழம் புரட்சிகர அமைப்பு (ஈரோஸ்) விடுதலைப் புலிகளுடன் நெருங்கி வந்துள்ளது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துக்ளக்

Vol. XVII No. 21 15.11.86

காரியாலயம்:
757, மவுண்ட் ரோடு,
சென்னை-600 002.




# தமிழ் ஈழமா, பிரபாகரன் நாடா?

இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றி இங்கே போடப்பட்டு வந்த சில வேஷங்கள் கலைய ஆரம்பித்திருக்கின்றன. தனி ஈழம் அமைப்பது என்ற போர்வையில் — இலங்கைத் தமிழர் பகுதிகளை பிரபாகரன் வசம் ஆக்குவதற்கு இங்கே பிரச்சாரம் செய்து வந்தவர்கள், இப்பொழுது போர்வையை விலக்கிக் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். நேரடியாகவே 'இலங்கை அரசு, தமிழர் பிரச்னை பற்றி பிரபாகரனிடம்தான் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்! அமிர்தலிங்கத்திடமோ, மற்றவர்களிடமோ பேசிப் பயனில்லை. இந்திய அரசும், இந்த நிலையை உணர்ந்து, தமிழ் மக்களின் பிரதிநிதியாகப் பிரபாகரனையே ஏற்று, அதற்குத் தகுந்தபடி நடந்து கொள்ள வேண்டும்' என்று இங்கு பிரச்சாரம் தொடங்கி விட்டது.

அதாவது 'தமிழ் ஈழம்', 'தமிழர்களுக்கு தங்களைத் தாங்களே ஆளும் வாய்ப்பு', என்ற மேல்பூச்சுக்கள் விலகி, 'பிரபாகரனிடம் யாழ்ப்பாணத்தையும், மற்ற தமிழர் வாழும் பகுதிகளையும் ஒப்படைக்க வேண்டும்' என்று கூறும் அளவுக்குப் பிரச்சாரம் வந்து விட்டது.

இந்த நிலையைத் தோற்றுவிப்பதற்காக, பிரபாகரன் தனக்குப் போட்டியாக இருந்தவர்களையெல்லாம் ஒழித்துக் கட்டினர். பல உயிர்கள் பலியாயின. இதையும் மிஞ்சி இயங்கக் கூடிய இயக்கங்கள் 'தடை', செய்யப்பட்டன. தமிழகத்தில் பிரசாரம் முடுக்கி விடப்பட்டால்தான் டெல்லியில் பிரபாகரனுக்குக் காரியம் நடக்கும் என்பதற்காக, இங்கே 'தீவிரவாத இயக்கங்களில் தூய்மையான இயக்கம் பிரபாகரனின் இயக்கமே' என்ற பிரச்சாரமும் விமரிசையாக நடந்தது.

இதற்கு ஒரு உதாரணம், சமீபத்தில் சென்னையில் நடந்த நிகழ்ச்சி. இ.பி.ஆர்.எல்.எஃப். என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள், சென்னையில் ஒரு பகுதியில், சாதாரண மக்களைச் சுட்டார்கள். ஒருவர் இறந்தார். இதையடுத்து அந்த தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டார்கள். இதுபற்றி இ.பி.ஆர்.எல்.எஃப். என்ற தீவிரவாத இயக்கம் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அந்த தீவிரவாதிகள் முதலில் சிலரால் தாக்கப்பட்டதாகவும், அதையடுத்துத்தான் அவர்கள் துப்பாக்கியால் சுட்டதாகவும், அந்த அறிக்கை கூறுகிறது. முதலில் தாக்கியது யார் என்று அவர்கள் சொல்லவில்லை. போலீஸ் தரப்பிலும் இதுபற்றிப் பேச்சு இல்லை. சாதாரணமாக, பிரபாகரன் இயக்கம் சம்பந்தப்பட்டால்தான் இந்த மாதிரி விபரீத மௌனம் இங்கே அனுஷ்டிக்கப்படுவது வழக்கம். ஆகையால், இந்த நிகழ்ச்சியில் பிரபாகரனின் இயக்கத்துக்கு ஏதாவது தொடர்பு இருக்குமோ என்ற சந்தேகம் நமக்கு வருகிறது.

பொதுவாகவே, நமது நாட்டு சட்ட திட்டங்களுக்கு அப்பாற்பட்டவர்களாக நின்று, இங்கே இஷ்டம்போல் இயங்க, பல தீவிரவாத இயக்கங்களுக்கும் லைசென்ஸ் வழங்கப்பட்டது போல் ஆகி விட்டது. இதனால் விளையக்கூடிய விபரீதங்களைப் பலமுறை எடுத்துக்காட்டி, 'தமிழ் துரோகி' என்ற பட்டத்தை மீண்டும் மீண்டும் பெற்றாலும், எச்சரிப்பது நமது கடமையென உணர்ந்து மீண்டும் எச்சரிக்கிறோம் — தீவிரவாதிகள் ஆயுதங்களுடன் இங்கே இயங்குவது தமிழகத்தின் அமைதிக்குப் பெரிய குந்தகத்தை விளைவிக்கும்.

இவர்களுக்கு கொடுக்கப்படும் சலுகைகளால் இன்னொரு கெடுதியும் விளைகிறது. போதை பொருட்களைக் கடத்திக் கொண்டு வந்து செய்யப்படும் வியாபாரம் பெருமளவில் நடக்கிறது. ஒரு சில மாதங்களுக்கு முன்னால், சென்னை கல்லூரி ஒன்றில் இவர்களில் பலர் இந்த வியாபாரத்தில் ஈடுபட்ட போது, கையும் களவுமாக அகப்பட்டதாக நமக்குச் செய்தி வந்திருக்கிறது. ஆனால், நடவடிக்கை எதுவும் இல்லை. என்ன விபரீதம் இது? இங்கே நடத்தப்படும் அரசியலுக்காக மாணவர்களின் எதிர்காலமுமா பலியாக வேண்டும்?

ஆம். இலங்கைப் பிரச்னையிலும், நடத்தப்படுவது அரசியல்தான். டெல்லியிடம் எம்.ஜி.ஆர். பயப்படுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. ஆட்சியில் அவ்வளவு ஊழல்கள். இந்த நிலையில் டெல்லியும் ஏதாவது ஒரு விஷயத்திற்காக அவருடைய உதவியை நாட வேண்டியது அவசியம் என்றால், எம்.ஜி.ஆர். அதை விட்டு விடுவாரா? 'இலங்கைப் பிரச்னையில் தீர்வு காண்பதற்கு தீவிரவாதிகளின் ஒத்துழைப்பும் தேவை' என்று மத்திய அரசு கருதி, அதற்கு எம்.ஜி.ஆர். உதவியை நாட வேண்டியிருக்கிறது. காரணம் — 'பிரபாகரன் எம்.ஜி.ஆரின் போஷாக்கில் இருப்பதுதான்.' இந்த நிலை தொடர்ந்தால்தான், டெல்லிக்கு எம்.ஜி.ஆர். உதவி தேவை என்ற நிலையும் தொடரும். அதனால்தான் இங்கு பிரபாகரனின் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு விசேஷ சலுகைகள் கிடைக்கின்றன.

எம்.ஜி.ஆர். கூட ஒன்றைப் புரிந்து கொள்வது நல்லது. தீவிரவாதத்தையும், வன்முறையையும் வளர்ப்பது சுலபம். அதன்பின் அடக்குவது வெகு கடினம்.

அராஜகத்தனமாக தமிழர் பிரச்னையை அணுகிய ஜெயவர்த்தனவின் சிங்கள அரசு, ஓரளவு இறங்கி வந்து, சில அதிகாரங்களையாவது பங்கிட்டுக் கொள்ள முன் வந்திருக்கும் இந்தச் சமயத்தை நழுவ விடக்கூடாது. இலங்கைத் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு, சிங்களவரோடு சம உரிமை, நியாயமான முறையில் அதிகாரப் பங்கீடு, மொழிக்கு அந்தஸ்து போன்றவற்றைப் பெற்றுத் தருவதுதான் முக்கியமே தவிர, பிரபாகரன் என்ற ஒரு நபர் ஆள்வதற்கு ஒரு நாட்டைப் பெற்றுத் தருவது இந்தியாவின் கடமையாக இருக்க முடியாது.

இப்போது தமிழகத்தில் பல சக்திகள் இந்த முயற்சியில்தான் ஈடுபட்டிருக்கின்றன. அவர்கள் தேடுவது — இலங்கைத் தமிழ் மக்களுக்கு வாழ்வு அல்ல. பிரபாகரனுக்கு ஒரு ஆட்சியைத் தேடுகிறார்கள். இலங்கைத் தமிழர் பிரச்னை இன்னமும் தீராமல் இருப்பதற்குக் காரணம் ஜெயவர்த்தன மட்டுமல்ல, இவர்களும்தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்